மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

இரயில்வே மேம்பாலம்

***17385—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கொல்லம் பிரதான சாலையில் உள்ள பாவூர்சத்திரத்தில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி–கொல்லம் பிரதான சாலையில் உள்ள பாவூர்சத்திரத்தில் இரயில்வே கடவிற்கு மாற்றாக இரயில்வே மேம்பாலம் அமைக்க தற்போது சாத்தியக் கூறு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானம் பொழியவில்லை, பூமி விளையவில்லை, தமிழக மக்களெல்லாம் தைப் பொங்கலைக் கொண்டாடுவதற்கு வேதனையுடன் இருந்தார்கள். அதே நேரத்தில் 'தாய்க்குத் தாயாக நான் இருக்கிறேன்' என்று கூறி விலையில்லா அரிசி, சர்க்கரை வழங்கி, மஞ்சள், கரும்பு வாங்குவதற்கு 100 ரூபாயும் கொடுத்து தமிழ் மக்களின் வேதனையைத் தீர்த்து இனிய பொங்கலைக் கொண்டாட வைத்த தாயே! தங்கள் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

2013 ஏப்ரல் 2]

நேற்றையதினம் 11 மாவட்டங்களுக்கு 18 இரயில்வே மேம்பாலங்கள் அமைக்க 948 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய அன்னையே, கொல்லம்–திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் பாவூர்சத்திரம் இரயில்வே கேட் உள்ளது. அருகிலுள்ள தென்காசியில் பள்ளிகள், கல்லூரிகள், அரசு பொது மருத்துவமனைகள், காய்கறிச் சந்தைகள் உள்ளன. ஆலங்குளம், பாவூர்சத்திரம் பகுதியிலுள்ள மாணவ, மாணவிகள், நோயாளிகள், விவசாயப் பெருமக்கள் அதைக் கடந்து செல்ல வேண்டும். இந்த கேட் மூடப்படுவதால் அவர்கள் சிரமப்படுவதால், இங்கு ஒரு மேம்பாலத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி–கொல்லம் பிரதானச் சாலையில் தென்காசி–ஆலங்குளத்திற்கிடையே பாவூர்சத்திரத்திலுள்ள இரயில்வே கடவு எண் 83–ல் பிப்ரவரி 2008–ல் இரயில்வே துறையின் கணக்குப்படி இரயில்வே வாகனப் போக்குவரத்து செறிவு 37,664 ஆகும். கடந்த டிசம்பர் 2009 முதல் மூன்று வருடகாலங்களுக்கு இருப்புப் பாதை அகலப்படுத்தும் பணி நடைபெற்றதால் அக்கடவில் இரயில்வே போக்குவரத்து இல்லாமலிருந்து, மீண்டும் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் இரயில்வே போக்குவரத்து நடைபெற்று வருகிறது. ஒரு நாளைக்கு 4 முறை இரயில்வே கடவு மூடப்படுகிறது. இரயில்வே வாகனப் போக்குவரத்து செறிவு இன்றும் ஒரு இலட்சத்திற்கும் குறைவாகவே இருப்பதாகக் கருதப்படுவதால் சாலை மேம்பாலம் அமைப்பதற்கு சாத்தியக் கூறு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே கேட் மூடப்படும் நேரம் அதிகாலை 8–00 மணி. அதாவது பள்ளி நேரங்களிலும், அதேபோல மாலை 5–00 மணிக்கும், ஆக இந்த இரண்டு நேரங்களில் மூடப்படுவதால்*

வாகன நெரிசல் அதிகமாகியுள்ளது. அந்த கேட் மூடப்படுவதால் பாவூர்சத்திரத்திலிருந்து பஸ் ஸ்டாண்டுவரை 40 பேருந்துகள் நின்று மிகப் பெரும் சிரமத்தை உண்டாக்குகின்றன. ஆகவே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இதைப் பரிசீலித்து, அங்கு மேம்பாலத்தை அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தில் எத்தனை முறை இரயில்வே கடவு மூடப்படுகிறதோ அப்பொழுது நிற்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, சராசரி ஒரு இலட்சம் வாகனங்களுக்கு மேற்பட்டு இருந்தால் அங்கே இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியில் ஒரு இலட்சம் வாகனங்களுக்குக் குறைவாகவே இருக்கின்ற காரணத்தினால் மேம்பாலம் அமைக்க இயலாது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி அதன்மூலம் விபத்துகளும், உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கும்வண்ணம் குடியாத்தம் மையப் பகுதியில் ஓடுகின்ற கௌண்டன்ய மகாநதி ஆற்றங்கரையின்மீது ஒரு மாற்றுச் சாலை அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் பகுதியை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப

2013 ஏப்ரல் 2]

அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், திருப்புல்லானி ஒன்றியத்தில் உத்திரகோசமங்கை என்ற ஊர் இருக்கின்றது. உத்திரகோசமங்கைக்குப் பக்கத்தில் அதே ஊராட்சிப் பகுதியில் கண்ணன்கோவில் இருக்கின்றது. அந்தக் கண்ணன்கோவிலில் ஒரு திருவிழா நடைபெறுகின்றது. அதற்கு ஏராளமான மக்கள் வருவார்கள். ஆனால், அந்தக் கண்ணன்கோவிலைச் சென்றடைவதற்கான பாதையிலே ஒரு ஆறு குறுக்கிடுகின்றது. அங்கு ஒரு பாலம் கட்டினால் அந்தத் திருவிழாவில் பங்குகொள்ளக்கூடிய மக்களுக்கு மிகுந்த பலன் அளிக்கும். அப்படிப்பட்ட ஒரு பாலத்தைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஒவ்வோர் ஆண்டும் பரிசீலித்து, எந்தெந்தப் பகுதியிலே பாலம் கட்ட வேண்டுமோ, அவசியம் இருப்பின் அங்கே பாலம் கட்டப்பட்டு வருகிறது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கண்ணன்கோவிலில் விழா நடக்கின்றபொழுது பக்தர்கள் அங்கு அதிகமாக செல்லவேண்டியுள்ள காரணத்தினால் அந்தப் பகுதியில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். இதனை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.